**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 101/2022</u>**

PW10 – திரு.சாகுல் ஹமீது நாள். 05.03.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>10 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது சகோதரி பெயர் பௌசியா பீவி என்றால் சரிதான். அவர் எந்த ஊரில் உள்ளார் என்றால் தேவகோட்டையில் உள்ளார். எனது சகோதரியிடம் பேச்சு வார்த்தையில் உள்ளேனா என்றால் 25 வருடங்களாக பேச்சு வார்த்தையில் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் 1 முதல் 9 பிரதிவாதிகளை பார்த்து பேசினேனா என்றால் பேசவில்லை. நான் எனது பிராதில் 1 முதல் 9 பிரதிவாதிகளிடம் நேரிலும், தொலைபேசியிலும் பாகப்பிரிவினை செய்யக் கோரி கேட்ட போது தாவா சொத்தை நாங்கள் அனைவரும் அனுபவம் செய்து வருவதாக உறுதி அளித்தார்கள் என சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரிதான்.

2. அசல் வழக்கு எண்.15/2012 வழக்கில் எனது சகோதரி பௌசியா பீவி வாதியாக இருந்த எனது சகோதருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தார் என்றும் அந்த சாட்சியத்தில் எனக்காகவும் வழக்கு நடத்துவதாக சொல்லியுள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கானது 28.06.2019 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி தெரியாது. அசல்

வழக்கு எண்.15/2012 தீர்ப்பை எதிர்த்து எனது சகேதாரர் A.S.41/2019 என மேல்முறையீடு செய்தார் என்றும் அந்த மேல்முறையிட்டில் கீழமை நீதிமன்ற தீர்ப்பை உறுதி படுத்தி 11.11.2020 அன்று தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. A.S.41/2019 தீர்ப்பை எதிர்த்து 2 வது மேல்முறையீடு செய்யப்பட்டு அனுமதி நிலையிலேயே தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்து தொடர்பாக முன்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கிய நிலையில் அதே சொத்திற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி 10ம் பிரதிவாதியின் தாத்தா சுப்பிரமணியனுக்கு கிரைய பாத்தியமான சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சுப்பிரமணியன் இறந்த பிறகு அவரது வாரிசான 10ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை செய்தார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி வருவாய்த் துறையில் பணி செய்ததால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்தார் என்றால் சரியல்ல.

4. எனது தகப்பனார் முகம்மது ராவுத்தர் என்ற மம்மது என சொல்லியுள்ளேன் என்றும் 2ம் ஒரே பெயர் என சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும் நானும், 1 முதல் 9 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருவதாக நான் பிராதில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கும், எனது தகப்பனாருக்கும், 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கும்

பாத்தியப்பட்டது இல்லை என்றும் நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. வழக்கு எழுச்சி மூலம் கற்பனையானது என்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் மூலமாக எனக்கு எந்த உரிமையும் ஏற்படக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.